பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 6 (22—9—72) வெள்ளி — வெளியூர்: புரட்டாசி 7 (23—9—72) சனி [இதழ்: 84

மத்திய அரசு வருவாய்

புதுடில்லி, செப். 22—
நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் பல்வேறு தலைப்புக்களின் கீழும், அபினி விற்பனை மூலமும் மத்திய அரசுக்கு ரூ. 1184.50 கோடி வருவாய் கிடைத்திருக்கிறது; இது, கடந்த ஆண்டு இதற்கு ஒப்பான கால வருமானத்தைவிட ரூ. 183 கோடி அதிகமானதாகும்.

கடந்த ஜூலை மாதத்தில் மத்திய அரசின் வருவாய் ரூ. 133.68 கோடி; இது, சென்ற ஆண்டு ஜூலை மாதத்திய வருவாயைவிட 46 5 கோடி கூடுதலாகும்.

தமிழகத்தைப் பின்பற்றி பீகார் அரசு

கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசு

பாட்னா, செப். 22—
"தாழ்த்தப்பட்டவர் அல்லாத இளைஞர், தாழ்த்தப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், அவருக்கு ரூ 1000 பரிசு அளிக்கப்படும்" என்று பீகார் அரசு அறிவித்திருக்கிறது.

கலப்பு மணத்தை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

"இப்படிக் கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் சலுகைகள் உண்டு" என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைமைச் செயற்குழு-- பொதுக்குழுக் கூட்டங்கள்

அக். 12, 13, 14, 15 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 1972 அக்டோபர் 12, 13 (வியாழன்–வெள்ளி) ஆகிய இரு நாட்களிலும், பொதுக்குழுக் கூட்டம் அக்டோபர் 14, 15 (சனி--ஞாயிறு) ஆகிய நாட்களிலும், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெறும்.

இடம் மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

'அறிவகம்'
சென்னை-13
21-9-1972

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி.மு.க.

சென்னையில் கழகத் தோழர் படுகொலை

மாற்றுத் தொழிற்சங்க வெறியர்கள் திட்டமிட்ட செயல்

சென்னை, செப். 22—
சென்னை 'ஆம்சஸ்' தொழிற்சாலையைச் சேர்ந்த கழகத் தோழர் லிங்கம், மாற்றுத் தொழிற் சங்கத்தைச் சார்ந்த சிலரால் வழிமறித்துக் கத்தியால் குத்தப்பட்டு நேற்று பிற்பகல் இராயப்பேட்டை மருத்துவமனையில் மரணமடைந்தார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

கடந்த சில மாதங்களில் மாற்றாரின் வன்முறைக்குப் பலியான பிரதாப் சந்திரனை அடுத்து இவரும் அதே காரணத்திற்காகப் படுகொலைக்காளாகியிருக்கிறார்.

17—9—72 மாலை 5-மணியளவில் தோழர் லிங்கம், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்து கொண்டிருந்தபோது மாற்றுக் கட்சித் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த சிலர் ஒன்றுகக் கூடி அவரைக் கம்பாலும்--சவுக்குக் கட்டைகளாலும் அடித்துக் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டனர்.

படுகாயமடைந்த தோழர் லிங்கம் இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனளிக்காது நேற்று பிற்பகல் மரணமடைந்தார்.

கிண்டிப் பகுதியில் கழக ஆக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர் இவர்; தொழிற் சங்கப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

எண்ணத்தை மாற்றிக்கொண்டவர்கள் கருத்துக்கு எப்படி மதிப்பு இருக்கும்?

எதை எப்படிச் சொன்னாலும் மக்கள் ஏமாறமாட்டார்கள்

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் புகாருக்கு அமைச்சர் ஓ. பி. இராமன் மறுப்பும் விளக்கமும்

சென்னை செப். 22—
"தமிழ்நாட்டின் வளர்ச்சியை மனதிலேகொண்டு நல்ல எண்ணத்துடன் யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும் வரவேற்பதற்குத் தயாராக இருக்கிறோம்; எண்ணம் நல்லவையாக இருந்து -- சொல்லிய விவரங்கள் தவறு என்றாலும், உண்மையான விவரங்களை அவர்களுக்கு எடுத்து விளக்குவதில் மனவருத்தம் அடைவது தேவையில்லை என்பதை உணருகின்றோம்.

"ஆனால், எண்ணத்தையும் – கருத்தையும் ஒருசேர மாற்றிக்கொண்டவர்கள் யாராயினும், எதைச் சொன்னாலும் பொருட்படுத்தத் தேவையில்லை என்பது பொது நீதியாகும்; இரண்டையும் கோணலாக வைத்துக் கொண்டவர்கள், எதை எப்படிச் சொன்னாலும் மக்கள் ஏமாந்து நம்பிவிடமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதும்"

என்று, மின்சாரத்துறை அமைச்சர் ஓ பி. இராமன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் கூறிய புகார்களுக்கு மறுப்புத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்; நிலைமையை விளக்கி அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:—

"சமயநல்லூர் அனல் மின்நிலையம் ஏன் நிரந்தரமாக மூடப்பட வேண்டும் என்பது மர்மமாக உள்ளது; எப்போதாவது தேவையில்லை என்றால், தற்காலிகமாக மூடிவைப்பதே தகுந்த வழி' என்று முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் எழுதியிருக்கிறார்.

மீண்டும் தமிழக அரசின் ஊழல் குழுவினரில் சிலரைச் சந்தித்ததாகவும், அவர்கள் சில விவரங்களைச் சொன்னதாகவும், மேற்படி விவரம் 'சரியாக இருக்குமானால்......' என்று (இக்கு வைத்து) வழக்கறிஞர் வாதத் திறமையுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

எடுத்தவுடனேயே, 'அந்த மின் நிலையத்தில் 9 பாய்லர்கள் இருந்தன' என்று குறிப்பிட்டிருக்கிறார்; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதமாகும்; அந்த மின் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பாய்லர்களின் எண்ணிக்கை 5 மட்டுமேதான்; மேலும், அதனுடைய உறுப்புக்களைப் பற்றி விவரிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்."

இந்தச் சந்தர்ப்பத்தில், சில விவரங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்:—

"1968-ம் ஆண்டில், 'செயல் திறன் — பொருளாதாரக் குழு' அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டின் மின் உற்பத்தி -- மின் விரிவு -- பராமரிப்பு ஆகியவை பற்றி ஆய்வு அறிக்கை ஒன்று தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்; அந்தக் குழு, பல்வேறு பரிந்துரைகளைச் செய்தது; எல்லாப் பரிந்துரைகளையும் இப்பொழுது விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

ஆனால், அவற்றில் ஒன்று -- சமயநல்லூரில் அமைக்கப்பட்டுள்ள 14 மெகா வாட் சக்தியுள்ள அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தின் அடக்க விலை மிகவும் அதிகமாக இருக்கிறது; இதற்கு வேண்டிய நிலக்கரி வட மாநிலங்களிலிருந்து அரக்கோணம் வரையில் பிராட்கேஜ் இரயிலில் கொண்டுவரப்பட்டு -- அரக்கோணத்திலிருந்து மீட்டர்கேஜ் இரயிலுக்கு மாற்றிச் சமயநல்லூருக்கு அனுப்புவதில் அதிகச் செலவும் -- சிரமமும் இருக்கிறது; இப்படிச் செய்வதன் மூலமாக ஆண்டொன்றுக்கு சுமார் ரூ 50 இலட்சம் மின்சார வாரியத்திற்கு நட்டம் ஏற்பட்டு வருகிறது' என்பதாகும்.

இந்தச் சிக்கலையும் -- நட்டத்தையும் தவிர்ப்பதற்கு இதை மூடிவிடுவதென்றும், தூத்துக்குடியில் 600 மெகாவாட் அனல மின்நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குவதென்றும், கல்கத்தாவிலிருந்து நிலக்கரி, கப்பல் மூலமாகத் தூத்துக்குடிக்கு நேராகக் கொண்டுசெல்வது சிரமமற்ற— ஆதாயமுள்ள திட்டமென்றும் கருதி, தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மத்திய நீர் விசைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

சுருளியாறு, காடம்பாறை ஆகிய நீர் மின்திட்டங்களுக்கான ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆகவே, குழுவின் முடிவுப்படி, சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை விற்று விடுவதற்காக 1969 அக்டோபர் மாதம் பொது ஏலம் கோரப்பட்டது; அந்த ஏலத்தில், அதிகமாகக் கேட்கப்பட்டிருந்த தொகை ரூ. 38 23 இலட்சம்; இது மிகவும் குறைவான தொகை என்று மின்சார வாரியம் கருதியதால், ஏலம் ரத்து செய்யப்பட்டது.

அதற்குப்பின், 3—12—69 ல், மத்திய நீர்விசைக் குழுவுக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டு--இந்த அனல் மின் நிலையத்தை நிலக்கரிச் சுரங்கங்களின் அருகாமையில் இருக்கின்ற மாநிலங்களில் உள்ளவர்கள் வாங்கக்கூடும் என்று கருதி -- தொடர்பு கொள்ளப்பட்டது.

1970 மார்ச் திங்களில் பஞ்சாப் மாநில மின் வாரியத்துனர் தமிழ்நாடு மின்வாரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு-- பேச்சுவார்த்தைகளின் மூலம் ரூ. 42 இலட்சத்திற்கு இதனை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டனர்.

ஆனால், ஒப்புக்கொண்ட சில நாட்களுக்குப் பின்பு, இயந்திரங்களைக் கழற்றி ஏற்றிச் செல்வதில் சில சங்கடங்கள் இருப்பதாகக் கருதி, 'எங்களுக்கு மின் நிலையம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டனர்.

1971 நவம்பரில் திரும்பவும் பொது ஏலம் கோரப்பட்டது; அதில் அதிகமாகக் கேட்கப்பட்ட தொகை ரூ. 46.61 இலட்சம்; இத்தொகை, இப்போது உள்ள நிலவரத்திற்குச் சற்றுக் குறைவானதாகும் என்று கருதியதால், அவர்களிடத்தில் மறு ஏலம் கோரப்பட்டது; அதில், அதிகப்படியாக ஏலம் கேட்கப்பட்டிருந்த தொகை ரூ. 59.16 இலட்சம்; அத்தொகைக்கு -- விதிமுறைகட்கு ஏற்ப -- மின் நிலையத்தை வாரியம் கொடுப்பதாக முடிவு செய்தது; எல்லா ஏலத்திலும் 'சீல்டு' டெண்டர்களாகப் பெறப்பட்டு அனைவர் முன்னிலையிலும் அவை உடைக்கப்பட்டன.

இவ்வாறாக, சட்ட முறைப்படி நடந்து கொண்டிருக்கின்ற மின்வாரிய நடவடிக்கைகளில் தவறு இருக்குமானால் சுட்டிக் காட்டட்டும்; சட்டப்படி இத் தொகையைவிட அதிகமாக யாரேனும் கேட்டிருந்து--அவர்கட்குக் கொடுக்காமல் குறைந்த விலையில் கேட்டவர்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்ல முடியுமா?

மின் நிலையம் விற்கப்படும் வரையில் மாதம் ஓரிரு நாட்கள் ஓட்டி வைத்தால்தான், அந்த இயந்திரம் நல்ல நிலையில் இருக்கும்; ஆகவே, அதை ஓட்டுவதற்கான ஆட்கள் -- அந்த நிலையத்திலுள்ள எல்லாப் பிரிவினரும் அங்கேதான் நிறுத்தி வைத்திருக்கப்பட வேண்டும்; இப்போது விற்றபின், அங்கே தேவையற்ற பல ஆட்கள் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்; மீதமிருக்கின்றவர்கள் மின் வாரியத்திற்குத் தேவையான தளவாடங்கள் செய்வதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, 'வெட்டியாக இன்னும் சம்பளம் கொடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்' என்பது சரியல்ல; 'விற்றது தவறு' என்று சொல்கின்ற முன்னாள் முதலமைச்சர், இப்போது, 'தேவையில்லை என்றால் சில காலம் மூடி வைக்கலாம்' என்கிறார்; அப்போது, அவர்கட்கு வேலை இல்லாமலதானே சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பதையும்-- அதை ஓட்டிக்கொண்டிருந்தால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 50 இலட்சம் மக்கள் வரிப் பணம் நட்டப்படுத்தப்படுகிறது என்பதையும் -- இதை விற்பதற்கு முடிவெடுப்பதற்கு முன்னால் இதனுடைய இலாப-நட்டங்களையும், மின் உற்பத்தியையும் மனத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவுச் செல்வத்தை இழந்துவிடக்கூடாது

கல்வித் துறையில் அரசு அளிக்கும் சலுகைகளை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

கல்வியமைச்சர் நாவலர் வேண்டுகோள்

வேட்டவலம், செப். 20

"ஒருவன் தன் நிலையை உயர்த்திக்கொள்ள -- அறிவு ஆற்றலை நன்கு வளர்த்துக்கொள்ள -- தொல்லைகளிலிருந்து விடுவித்துக்கொள்ளக் கல்விதான் ஒருவனுக்குக் கடைசிவரை துணைபுரியுமே தவிர வேறேதும் இல்லை.

"கல்வியில் முதலீடு செய்தால்தான் நாடு எதிர்காலத்தில் மிகச் சிறப்புற்றுத் திகழ முடியும்; கல்விச் செல்வம் ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றும்; மற்றையச் செல்வங்கள் நம்மால் காப்பாற்றப்பட வேண்டும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வேட்டவலத்தில் ரூ. 56 000 செலவில் கட்டப்பட்ட பள்ளித் துணைக் கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கல்விக்காக அரசு கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது; ஒவ்வொரு மாணவனுக்கும் கல்விக்காக இந்த அரசு எவ்வளவு பணம் செலவழித்து வருகிறது என்பதைச் சொல்கிறேன்.

1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்புவரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 62 செலவழிக்கிறது.

6-வது முதல் 8-வது வகுப்புவரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 112 செலவு செய்கிறது.

9-வது முதல் 11-வது வகுப்புவரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ரூ. 245 செலவு செய்கிறது.

கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 660 செலவு செய்கிறது.

பாலிடெக்னிக்கில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 3,600 செலவழிக்கிறது.

பொறியியலில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 8,400 செலவு செய்கிறது.

டாக்டர் படிப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏறக்குறைய 5 ஆண்டுகட்கு மட்டும் ரூ. 55,000 செலவழிக்கிறது.

இவ்வளவு செலவழிப்பதற்குக் காரணம் எதிர்காலத்தில இந்த நாடு மிகச் சிறப்புற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத்தான்!

கோடிக்கணக்கான ரூபாய்களைக் கல்விக்கு மட்டும் -- வேறெந்தத் துறைக்கும் செலவழிப்பதைவிட -- இந்தத் துறைக்கு அதிகமான அளவில் அரசு செலவு செய்து கொண்டு வருகிறது.

அரசு அளிக்கும் சலுகைகளை மாணவமணிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கை முன்னேற முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

சென்னையில் டெலிவிஷன் நிலையம்

கட்டும் பணிகள் தொடக்கம்

சென்னை, செப். 21—

"சென்னை டெலிவிஷன் (படரேடியோ) நிலையம் கட்டும் பணிகள் தொடங்கிவிட்டன; அடுத்த ஆண்டு செப்டம்பருக்குள் இந்தப் பணிகள் முடிவடைந்துவிடும்"

என்று, தமிழ்நாடு அரசு தலைமை எஞ்சினியர் (கட்டுமானப் பிரிவு) டி. அம்புரோஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

அண்ணா சாலையிலுள்ள உள்ள அரசினர் எஸ்டேட்டில் இதற்காக ஐந்து ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இங்கு 4,000 சதுர மீட்டர் பரப்பில் ஒரு டெலிவிஷன் ஸ்டுடியோவும் -- நிர்வாக அலுவலகக் கட்டிடங்களும் கட்டப்படும்; முற்றிலும் குளிர் சாதன வசதி பொருத்தப்படும்; தேவைப்பட்டால் இரண்டாவது ஸ்டுடியோ கட்டுவதற்கும் இங்கு இடம் ஒதுக்கப்படும்.

டெலிவிஷன் நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவதற்கு 150 மீட்டர் உயரத்தில் ஓர் ஒளி பரப்பு கோபுரமும் கட்டப்படும்.

1974-ம் ஆண்டு சனவரிக்குள் சென்னையில் டெலிவிஷன் ஒளி பரப்பு தொடங்கிவிடும்.

விலை உயர்வைத் தடுக்கத் திட்டம்

எல்லா விலைபொருள்களையும் அரசே கொள்முதல் செய்து வழங்கும்

இடைத் தரகர்களின் இன்னல் ஒழியும்

உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி தகவல்

சென்னை, செப். 21—

"உணவுத் தானியங்களின் விலை வரைமுறையின்றி உயர்ந்து செல்வதற்குக் காரணம் இடைத் தரகர்களே யாவர்!

'எனவே, விலை உயர்வைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதற்காக எல்லா விளை பொருள்களையும் கொள்முதல் செய்ய அரசு எண்ணுகிறது"

என்று தமிழ்நாடு உணவுத் துறை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள், சென்னை ஓட்டல் அதிபர்கள் சங்கமும் -- மாநில ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் இணைந்து நடத்திய விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் வலியுறுத்திக் கூறியதாவது:—

"இப்பொழுது விலைவாசி உயர்ந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏழை எளிய மக்களுக்குப் பல நல்ல திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றி வருகையில், அவற்றை பலர் ஆதரிப்பதும் -- சிலர் தூற்றுவதுமான நிலை இப்போது இருக்கிறது.

உணவுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க அரசு பாடுபடுகிறது.

களுக்கு உதவும் வகையில் ஓட்டல்களைத் துப்புரவாக நடத்தி வர வேண்டும்."

ஓட்டல் அதிபர்கள் சங்கத் தலைவர் வி. ஜெபராமன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. எல். கணேசன் எம்.எல்.ஏ. விழாவில் கலந்துகொண்டு பேசினார்.

திரு. என் இராமசாமி நன்றி கூறினார்

அணு மின்சார நிலையங்கள்

மேலும் இரண்டு ஏற்படுத்தப்படுமாம்

விஜயவாடா, செப். 21—

"மேலும் இரண்டு அணு மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்படும்; இவற்றில் ஒன்று தென்னாட்டிலும், மற்றொன்று வடநாட்டிலும் ஏற்படுத்தப்படும்"

என்று மத்திய நீர்ப்பாசன -- மின்சார அமைச்சர் கே. எல். ராவ் நிருபர்களிடம் கூறினார்.

[ஏற்கனவே மகாராட்டிரத்தில் உள்ள தாராப்பூரில் அணு மின்சார நிலையம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; இது தவிர, இராஜஸ்தானில் உள்ள கோடாவில் அணு மின்சார நிலையம் உற்பத்தி செய்யும் நிலைமையை அடைந்துள்ளது; தமிழ்நாட்டில் செங்கல்பட்டிற்கு அருகே கல்பாக்கத்தில் ஒரு அணு மின்சார நிலையம் கட்டப்பட்டு வருகிறது.]

"புதியதாக அமைக்கப்படக் கூடிய இரண்டு அணு மின்சார நிலையங்களில் தென்னாட்டில் அமைக்கப்படவிருக்கும் நிலையத்துக்கு ஆந்திரத்தில் உள்ள ஸ்ரீசைலம் பகுதி தேர்ந்தெடுக்கப்படலாம்" என்று அவர் கூறினார்.

"இந்தியாவின் நிலக்கரி வசதிகள் இன்னும் 10 -- 20 -- 30 ஆண்டுகளில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிடுமாதலால், கூடிய விரைவில் அணுசக்தி மின்சார நிலையங்களை ஏற்படுத்த திட்டமிடுவது அவசியமாகும்" என்றார்.

தீண்டாமை ஒழிப்பில் தமிழக அரசு தீவிரம்

புகார்கள்மீது தீவிர நடவடிக்கை

அமைச்சர் சத்தியவாணிமுத்து உறுதி

மதுரை, செப். 21—

"தீண்டாமையை ஒழிப்பதற்குத் தமிழக அரசு தீவிரமாக முயற்சித்துவருகிறது; இதற்காகத் தனிப் போலீசுப் படை அமைக்கப்பட்டிருக்கிறது; அன்றியும், இதற்காக விரைவில் தனி வாரியம் அமைக்கப்படவிருக்கிறது; மாநில அளவுக்கு ஒரு குழு அமைக்கப்படும்; இந்தக் குழுவுக்கு அரிசன நலத்துறை அமைச்சர் தலைவராக இருப்பார்; மாவட்ட அளவில் கலெக்டர் தலைமையில் ஒரு குழுவும் -- வட்ட அளவில் ஒரு குழுவும் அமைக்கப்படும்.

"தீண்டாமை பற்றிப் புகார் வந்தால் இந்தக் குழுவினர் அந்த இடங்களுக்குச் சென்று விசாரணை நடத்திப் போலீசாரிடம் புகார் கொடுப்பார்கள்; அதன்பின், போலீசார் நடவடிக்கை எடுப்பார்கள்.

"தீண்டாமைக் குற்றம் செய்பவர்களுக்கு 3 மாதம் சிறைத் தண்டனையும் -- ரூ. 200 அபராதமும் விதிக்கப்படும்; மத்திய அரசும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது.

"திருச்சியைத் தவிர, மற்ற மாவட்டங்களில் 'தீண்டாமை ஒழிப்பு வாரிய'த்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; திருச்சி மாவட்டத்திலிருந்து குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின், இன்னும் ஒரு சில மாதங்களில் இந்த வாரியம் செயல்படத் துவங்கும்"

என்று தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அன்று வேடிக்கைப் பார்த்தவர்கள்தான் இன்று குறைகூற முனைகின்றனர்

மதுரையில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—" தி.மு. கழக ஆட்சியில் அரிசனங்களுக்குப் பாதுகாப்பு இல்லை -- நன்மை இல்லை; இரண்டு அமைச்சர்கள் இருந்தும் ஒன்றும் செய்யவில்லை; கீழ்வெண்மணி கிராமத்தில் அரிசனங்கள் தீயில கொளுத்தப்பட்டார்கள் -- என்று காமராசர் கூறியிருக்கிறாரே?"

பதில்:—" அவருடைய ஆட்சிக் காலத்திலும் 2 பேர் (ஜோதி அம்மாள் -- கக்கன்) அமைச்சர்களாக இருந்தார்கள்; அவருடைய காலத்தில் 80 அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டது; ஆனால் அவர்களால் வீடு கட்டிக்கொள்ள முடியவில்லை; அப்போது இருந்த காங்கிரசு அரசாங்கம் அதனைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது; தி.மு. கழக ஆட்சி வந்த பிறகுதான் அவர்கள் வீடு கட்டிக்கொண்டு வருகிறார்கள்.

காமராசருடைய 'ஆட்சிக் காலத்தில்தான் முதுகுளத்தூரில் கலவரம் நடந்தது; அதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

கீழ்வெண்மணி கலவரத்திற்குக் காரணமே சிண்டிகேட்டுக்காரர் தான்; அவருக்கு நீதிமன்றத்தில் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கழக ஆட்சியில் நன்மை பெறுகின்றனர்

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழக ஆட்சியில்தான் அரிசனங்கள் நன்மைகளைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்; கோவில்களில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் -- அர்ச்சகர்களாக நியமிக்கப்படும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ள முன்பு ரூ. 940 கொடுக்கப்பட்டது; இப்போது ரூ. 1,601 வழங்கப்படுகிறது.

கடனைத் திருப்பிக்கட்ட முடிந்தவர்களுக்கு ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 16,000 வரையில் வீடு கட்டிக்கொள்ளக் கடன் தரப்படுகிறது.

தொழில் செய்யக் கடனுதவி

ரூ. 10,000 வரை தொழில் செய்யவும் கடன் கொடுக்கப்படுகிறது.

அரிசனங்கட்கு இந்த அரசு ஏராளமான நன்மைகளைச் செய்துவருகிறது; ஆனால், காமராசர் வேண்டுமென்றே குற்றம் சுமத்த முனைகிறார்!"

ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குடிசைகள் மறைந்துவிடும்

அமைச்சர் க. இராசாராம் உறுதி

திருப்பூர், செப். 22—

"இப்போது படிப்படியாகக் குடிசைகள் மாற்றப்பட்டு வருகின்றன; தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் குடியிருந்துவந்த வீட்டு மனையை அவர்களுக்கே சொந்தமாக்கிச் சட்டம் போட்டோம்.

"இன்னும் 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் குடிசைகளும் மாற்றப்பட்டு -- அதற்குப்பதில் மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்."

என்று, பிற்பட்டோர் நலத்துறை நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

கூட்டத்துக்கு திரு. அழகிரிசாமி தலைமை தாங்கினார்.

திருப்பூரில் அண்ணா பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் டவுன்ஹால் மைதானத்தில் நடந்தது.

அமைச்சர் க. இராசாராம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழகத்துக்கு நல்ல ஆட்சியை ஏற்படுத்திக் கொடுத்து -- நம்மைக் குடும்பப் பாசத்துடன் கட்டி வளர்த்தவர் அண்ணா; அவருக்குத் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகப் பிறந்தநாள் விழா எடுக்கப்பட்டு வருகிறது; தமிழர்கள் இதயம் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தால் பூரிப்படைகிறது.

அண்ணா கனவுகண்ட திட்டமான ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை வழங்கும் விழாவில் கலந்துகொண்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

1965 ஆம் ஆண்டில் இதே ஊரில் -- இந்த மைதானத்தில்தான் இந்தியை எதிர்த்து அண்ணா பேசினார்; அப்போது நானும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்; இன்று அவருடைய பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு இங்கு பேசுவதை பெரும் பேருகக் கருதுகிறேன்.

அண்ணாவுக்குப் பின் அவர் வழியில் கலைஞர் நல்ல பல திட்டங்களை தீட்டி நல்லாட்சி நடத்தி வருகிறார்; காமராசர் ஆண்ட காலத்தில் கொடுக்கப்படாத தியாகிகள் மானியம் கழக ஆட்சியில் கொடுக்கப்பட்டது; அதை மாதம் ரூ. 75ஆக உயர்த்திச் சட்டம் போட்டவர் கலைஞர்.

குடிசை மாற்று வாரியம் போன்று ஏழைகளுக்குப் பயன் தரும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது."

பன்றிகளுக்குத் தடை விதிப்பு

விஜயவாடா, செப். 21—

விஜயவாடா நகராட்சி எல்லைக்குள் பன்றிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது

"சாலைகளிலும் --- சந்துகளிலும் பன்றிகள் காணப்பட்டால் அவைகள் சுட்டுக்கொல்லப்படும்" என்று அவற்றின் சொந்தக்காரர்களுக்கு நகராட்சியின் தனி அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போக்குவரத்துக்கும் பன்றிகள் இடைஞ்சல் விளைவிப்பதாகக் கூறப்படுகிறது.

விஜயவாடா நகரில் 70,000 பன்றிகள் இருக்கின்றன.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

மாநாட்டில் கூட்டவேண்டும்; தொழிற் சங்கங்களுக்கு இடையே ஏற்படுகின்ற போட்டிகளை எப்படித் தீர்த்துக்கொள்வது என்பது பற்றிய ஒரு ஒழுங்கு முறை விதிகளையும், ஏற்படுத்த வேண்டும்; எந்தச் சங்கத்தை அங்கீகரிப்பது என்ற பிரச்சினையில், மத்திய அரசு தன் கூர்ந்த கவனத்தைச் செலுத்தி -- சட்டத்தில் தக்க மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்,

உற்பத்தி இழப்புதான் நாம் காணும் பலன்

செய்தியாளர்:—" வலது கம்யூனிஸ்டுகள் தலைமையில் உள்ள (ஏ. ஐ. டி. யு. சி.) சங்கங்கள் தானே இந்தக் கிளர்ச்சிகளுக்குப் பின்னால் இருக்கின்றன?"

அமைச்சர்:—" இந்தக் கிளர்ச்சிகளால் கம்யூனிஸ்டுகள் அடையப் போகும் நன்மை என்ன என்பதுதான் எனக்குத் தெரியவில்லை; இந்தக் கிளர்ச்சிகளால் தொழில் உற்பத்தி கெடுவது தான் கண்ட பலன்; இதனால் தொழிலாளர்களுக்கே கம்யூனிஸ்டுகள் தீங்கு இழைக்கிறார்கள்."

விலைகளை உயர்த்தாதீர்

ஓட்டல் அதிபர்கட்கு வேண்டுகோள்

ஓட்டல்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களுக்கு இப்போது 3½ சதவீதம் விற்பனை வரி உள்ளது; அதனைக் குறைப்பதா அல்லது நீக்கிவிடுவதா என்பது பற்றி அடுத்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவிருக்கிறது.

இதுபோன்ற பல உதவிகளை ஓட்டல் அதிபர்களுக்குக் கண்காணிப்போடு அரசு செய்து வருகிறது; எனவே, உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்; இதனால் உங்களுக்கு நட்டம் வந்துவிடாது என்பதை நான் அறிவேன்.

மக்களில் அதிகமானோர் ஓட்டல்களில் சாப்பிடுவதால் அவர்களுக்கு ஓட்டல் உரிமையாளர் தங்களால இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

ஓட்டல் அதிபர்கள் இங்கு பல கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள்; சர்க்கரையை நேரடியாக ஓட்டல்களுக்கு விநியோகிப்பது பற்றி முதலமைச்சருடன் கலந்து பேசுகிறேன்.

'ஓட்டல்களில் சாப்பிடுபவர்களில் பலருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்படுகிறது' என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்; இது போன்ற நோய்கள் வராத அளவுக்கு உணவுப் பண்டங்களைச் சுகாதாரமான முறையில செய்து -சுத்தமாக வைத்திருக்க வேண்டும்; ஏழை எளிய மக்

ஓய்வு பெற்றபின் சொந்த வீட்டில் வாழ்வதற்கு ஆசிரியர்கட்கு வாய்ப்பு

தமிழக அரசின் சீரிய திட்டம்

அமைச்சர் க. இராசாராம் அறிவிப்பு

கிருஷ்ணகிரி, செப். 21—

"இந்தத் திட்டத்துக்கும் பணம் செலுத்த நாள்தோறும் -- ரூ. 1 கட்ட பாங்கிக்குச் செல்ல வேண்டியதில்லை; முதல் நாள் பாங்கிக்குச் சென்று ஒரு ரூபாய் செலுத்திப் 'பாஸ்' புத்தகம் திறந்தால் போதும்; பிறகு, அதற்காக நியமிக்கப்பட்ட தனி ஊழியர்கள், குறிப்பிடும் இடத்தில் -- குறிப்பிடும் தேதியில் வந்து ஆசிரியர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொள்வார்கள்; தமிழக அரசின் இந்த நல்ல திட்டத்தை ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று அமைச்சர் க. இராசாராம் அவர்கள் சுட்டிக்காட்டி அறிவித்தார்.

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றப் பேரவையின் கிருஷ்ணகிரி நகரசபை கிளை திறப்பு விழா, நகராட்சித் தலைவர் பி. திம்மராயன் தலைமையில் நடைபெற்றது; பேரவையைத் தொடங்கிவைத்து, அமைச்சர் க. இராசாராம் பேசியதாவது:—

"தோணி -- மற்றவர்களை ஏற்றிச் சென்று கரை சேர்க்கிறது; ஆனால், தோணி கரை சேருவதில்லை; அதுபோல், ஆசிரியர்கள் தங்களிடம் படிக்கும் மாணவர்களைச் சிறந்தவர்களாக உருவாக்குகிறார்கள்; ஆனால், ஆசிரியர்கள் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள்.

இவ்வளவு சிறப்புமிக்க தொண்டு செய்யும் ஆசிரியர்களின் நலனில் தமிழக அரசு அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதை அனைவரும் அறிவார்கள்.

நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கட்டினால், ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தருவதற்குத் தமிழக அரசு திட்டம் ஒன்று வகுத்துள்ளது; இந்தத் திட்டத்தினால் ஆசிரியர்கள் பயன்பெற முடியும். ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு காலத்தில் சொந்த வீட்டில் வசிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

"நாள் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் ஆசிரியர்கள் ரூ. 2,000 கட்டினால், அரசாங்கம் ரூ 6,000 போட்டு -- ரூ. 8,000 மதிப்பில் ஆசிரியர்கள் விரும்பும் ஊரில் வீடு கட்டித் தரும்; அரசு தரும் கடனை, வாடகைப் பணமாகக் கொடுத்து அடைத்துவிடலாம்."

உடல்நோயை ஒரு நொடியில் அறியும் கருவி

வாஷிங்டன், செப் 21—

உங்களுக்கு நோய் ஏதாவது நீங்கள் அறியாமலே இருக்கிறதா? இதோ ஒரு நொடியில் கூறிவிட வழி இருக்கிறது; உங்களைப் புகைப்படம் எடுப்பது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிது இது; 'இன்ஃப்ராரெட் தெர்மாகிராஃபி' என்று ஒரு புதுமைக் கருவி வந்திருக்கிறது; நோயை நொடிப் பொழுதில் அறிந்து கொள்கிறது.

உங்கள் உடம்பின் வெப்பத்தை அளவிட்டு நோய் இருக்கிறதா இல்லையா என்று கூறிவிடும் இக்கருவி; இது பத்திரமானது -- இதனால் வலி எடுக்காது -- துல்லியமாக அளவிடுகிறது.

ஒவ்வொருவருடைய தனித்தனிப் பிரச்சினைக்கும் தக்கவாறு பயன்படக்கூடியது; அரை விநாடியில் முழு 'தெர்மோகிராப்ஃ' தயாராகிவிடும்.

உடம்பு விடும் சிவப்புக் கீழ்க் கதிர்களை 'தெர்மோகிராஃப்' பிடித்துக் கொள்கிறது; கதிர்களை அளந்து கண்ணால் பார்த்து அறியக்கூடிய வெப்பமாக மாற்றுகிறது; தொலைக்காட்சி (டெலிவிஷன்) யூனிட் ஒன்று வெப்பங்களை பல வண்ணங்களில்—கருப்பிலிருந்து வெள்ளை வரை—காட்டுகிறது.

கருப்பு என்றால் குளுமை; வெள்ளை சூடு; வெள்ளைப் புள்ளி நச்சு நோய இருப்பதற்கு அறிகுறியாகும்.

ஒற்றைத் தலைவலி -- கட்டி -- குடல்முளை அழற்சி (அப்பெண்டிசைட்டிஸ்) போன்ற பல வகை நோய்களை அறிய இப்புதிய கருவி பயன்படுகிறது.

கொங்கைப் புற்றுநோயைத் துவக்கத்திலேயே தெரிந்து கொள்ள முடியும்--மருத்துவ சோதனைக்கு முன்னடியே கண்டுபிடித்து விடலாம்.

நச்சு நோய் காரணமாக சிவப்பு நிறம் -- வீக்கம்--வேதனை எல்லாம் ஏற்படும் முன்னரே நச்சு நோயை 'தெர்மாகிராஃபி' கண்டுபிடித்து விடும்; இன்னொரு பயனும் இக்கருவியின் மூலம் கிடைக்கிறது; பெரிய அறுவைச் சிகிச்சை நடந்த பின்னர், நோயாளியின் உடம்பு தேறி வருவதை ஆராயப் பயன்படுகிறது; இக்கருவி விரைவில் மருத்துவர் அன்றாடம் பயன்படுத்தும் கருவியாகிவிடும்.

பொதுத் தேர்தல் நடத்தப் பூட்டோ மறுப்பதேன்?

புதுடில்லி, செப். 21—

பாகிஸ்தானில் புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று அந்நாட்டின் அரசியல் வாதிகளில் சிலர் கோரியதை அதிபர் பூட்டோ நிராகரித்து விட்டிருக்கிறார்.

"இந்தக் கோரிக்கையை நியாயப்படுத்த முடியாது; சாதாரணமான சூழ்நிலைகளில் சமூக முறையில் தேர்தலை நடத்துவதை நான் எதிர்க்கவில்லை; ஆனால் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இப்போதைய அவசர அவசியம் ஆகும்" என்று பூட்டோ கூறினார்.

"பாகிஸ்தானுக்கு ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்குதல் -- அதைச் செயல்படுத்துதல் -- மாகாண சுயாட்சி -- நாட்டில் முறையான சமநிலையை ஏற்படுத்துதல் ஆகியவையே அடிப்படை—பிரச்சினைகள்" என்று அவர் சொன்னார்.

சிறுதொழில் வளர்ச்சிக்கு கடன் வழங்கும் திட்டம்

முக்கியத் தகவல்கள்பற்றி விளக்கம்

சென்னை, செப். 21—

தொழில் வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், 1—4—72 முதல் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது; தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் கீழ் உதவி பெறக்கூடிய தொழில்களுக்கு இந்தப் புதிய திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், புதிய இயந்திரங்கள் வாங்கவும் -- சொந்த நிலத்தில் தொழிலுக்காகக் கட்டடங்கள் கட்டவும் -- நடைமுதல் மூலதனத்துக்காகவும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 25,000 வரையிலுள்ள கடன் விண்ணப்பங்கள் தொழில் வணிகத் துறையின் தொடர்புடைய உதவி இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டு -- மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக்கொண்ட மாவட்டக் குழுவின் மூலம் கடன் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

ரூ. 25,000-த்துக்கு மேற்பட்ட கடன் உதவிக்கான விண்ணப்பங்கள் தொடர்புடைய உதவி வளர்ச்சி அலுவலரால் ஆய்வுசெய்யப்பட்டு 'சிட்கோ'வின் இயக்குநர் குழுவினால் கடன் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

கடன் உதவிக்கான விண்ணப்பங்கள், 'சிட்கோ' அலுவலகத்தில் அல்லது மதுரை -- திருச்சி -- கோவை -- வேலூர் மாவட்டங்களில் உள்ள உதவி வளர்ச்சி அலுவலர் அலுவலகங்களில் கிடைக்கும்.

இத்திட்டத்தின் வாய்ப்பு அம்சங்களாவன:—

ரூ. 1,000-த்துக்கு மேற்படாத கடன் தொகை சொந்தப் பிணையின்மீது கொடுக்கப்படும்.

ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை சொந்தப் பிணையுடன் மற்றொருவர் பிணையின்மீது கொடுக்கப்படும்.

ரூ. 2,000-த்துக்குமேல் வில்லங்கம் இல்லாத அசையாச் சொத்துக்கள் (நிலம், வீடு) அல்லது இயந்திரங்களின் ஈட்டின்மீது கொடுக்கப்படும்; இச்சொத்துக்கள் விண்ணப்பதாரர் பேரிலோ அல்லது ஒப்புதல் கொடுக்கும் வேறு நபர் பேரிலோ இருக்கலாம்; ஈடு வைக்கும் சொத்துக்களின் மதிப்பில் 75 சதவீதம் கடன் கொடுக்கப்படும்.

இயந்திரங்களை ஈடு வைத்தால்—அவை பயன்படுத்தப்பட்ட பின் வாங்கியவையாக இருக்கக்கூடாது; அந்த இயந்திரத்தின் மதிப்புக்குச் சமமானமதிப்புக்குத் துணைப் பிணையம் கொடுக்க வேண்டும்; அதிக அளவாக ஒருவருக்கு ரூ. 1-இலட்சம் கடன் வழங்கப்படும்.

வட்டி விகிதம்:—ரூ. 50,000-க்குக்கீழ் ஏழே முக்கால் சதவிகிதமும், 50,000-த்துக்குமேல் எட்டே முக்கால் சதவிகிதமும் வசூலிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ. 1 ஆகும்.

ரூ. 30 லட்சம் செலவில் பாதாளச் சாக்கடை

செங்கற்பட்டு, செப். 22—

செங்கற்பட்டு நகரில் ரூ. 30 இலட்சம் செலவில் பாதாளச் சாக்கடைகள் அமைப்பதற்கு நகராட்சி திட்டமிட்டிருக்கிறது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் கடன் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கான அடிப்படை ஆய்வு நடத்தத் தமிழ்நாடு குடிநீர் -- வடிகால் வாரியத்திற்கு ரூ. 25,000 தருவதென நகராட்சி தீர்மானித்திருக்கிறது.

இந்தத் தகவலை, நகராட்சித் தலைவர் வ. பசுபதி தெரிவித்தார்.

'தொழிலாளர்களுக்குத் தீங்கு இழைக்கின்றனர்'

'வன்முறைகள் மூலம் தொழில் அமைதியைச் சீர்குலைத்தனர்'

கிளர்ச்சிகளைத் தூண்டும் கம்யூனிஸ்டுகள் பற்றி மைசூர் தொழில் அமைச்சர் வேதனை

பெங்களூர், செப். 22—

"மைசூர் மாநிலத்தில், தவனகிரி நெசவாலை முதல் எஸ். எம். டி., பத்ராவதி உருக்காலை வரையிலான பல்வேறு தொழிற்சாலையிலும் தொழிலாளர் வன்முறைக் கிளர்ச்சிகள் உருவாகியிருக்கின்றன; இதனால் மாநிலத்தில் தொழில் அமைதி சீர்குலைந்துவிட்டது; இதுபற்றி நான் மிகவும் வேதனையடைந்திருக்கிறேன்"

என்று மைசூர் மாநிலத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா, செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

மிரண்டு ஓடிவிடச் செய்வதாகாதா?

"மைசூர் மாநிலத்துக்கு மேலும் பல புதிய தொழில்களுக்கான அனுமதியை கேட்டும் பெற முயற்சிகள் செய்துவருகிறேன்; இந்த நேரத்தில் இதுபோன்று வன்முறைக் கிளர்ச்சிகளில் தொழிலாளர்கள் ஈடுபடுவதானது, தொழில் தொடங்க விரும்புவோரை இம்மாநிலத்திலிருந்து மிரண்டு ஓடச் செய்துவிடும்.

தொழிற்சங்கங்களின் போட்டி மனப்பான்மை

நிகழ்ந்த வன்முறை நிகழ்ச்சிகளில் பெருமபாலானவை, தொழிற்சங்கங்களுக்கு இடையே ஏற்பட்ட போட்டியிலும் -- அங்கீகாரப் பிரச்சினையாலும் உருவானவைகளாகும்.

மைசூர் மாநிலத்தில் தொழில் அமைதி ஏற்பட எல்லாத் தொழிற் சங்கங்களையும் ஒரு

(3-ம் பத்தி பார்க்க)

வடாற்காடு மாவட்டத்தில் நாவலர்

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வடாற்காடு மாவட்டத்தில் 16—9—72 அன்று பலதவறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்; அதன் விவரம் வருமாறு:—

திருவண்ணாமலையில் உள்ள வண்டிமேட்டுத் தெருவில ரூ. 1,50,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 'ப. உ. சண்முகம் மாளிகை' எனும் நகராட்சி மையப் பேருந்து வண்டி நிலையக் கடைகளையும் -- தங்கும் விடுதியையும் நாவலர் திறந்துவைத்தார்; திருவண்ணாமலை நகராட்சித் தலைவர் தலைமை வகித்தார்.

தேவனந்தலில் ரூ. 15,000 செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தினைக் கல்வியமைச்சர் திறந்து வைத்தார்; திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமைவகித்தார்.

அடிஅண்ணாமலை ஊராட்சி மன்றத்தின் சார்பில் ரூ. 17,550 மதிப்பீட்டில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தைக் கல்வியமைச்சர் திறந்துவைத்தார்; திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமை வகித்தார்.

ஆடையூர் ஊராட்சி மன்றத்தின் சார்பில் ரூ. 9,600 செலவில் கட்டப்பட்ட தானே இயங்கும் குடிநீர்த் தொட்டியினை கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் திறந்து வைத்தார்; திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் தலைமை வகித்தார்.

திருவண்ணாமலையிலிருந்து வேட்டவலத்திற்குச் செல்லும் வழியில் ஆவூரிலுள்ள கழகப் பணிமனையைத் திறந்து வைத்தார்; வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் கலந்துகொண்டார்.

வேட்டவலத்தில் ரூ. 56,000 செலவில கட்டப்பட்ட பள்ளி துணைக் கட்டடத்தைக் கல்வியமைச்சர் நாவலர் திறந்துவைத்தார்; விழாவிற்கு வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் தலைமை வகித்தார்.

திருப்பதிக்கு விமானம்

ஐதராபாத், செப். 21—

அக்டோபர் மாதம் 1-ந் தேதியிலிருந்து சென்னை -- பெங்களூர் -- ஐதராபாத் ஆகிய இடங்களிலிருந்து திருப்பதிக்கு விமானங்கள் விடப்படும்.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் சுரண் சிங் இந்த விமானப் போக்குவரத்தைத் துவக்கி வைப்பார்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

23--9--72

திருத்தங்கல்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மன்னீர் செல்வம் திடலில்; தலைவர்: சி. தன்ராசி; பேசுவோர்: கா. காளிமுத்து எம்.எல்.ஏ., எம். ஆர். கணேசன், ஏ. எஸ். கனி, ஓ. வி. அய்யனார், எம். பாலையா, எஸ். சுப்பிரமணியம், கூ. காந்தி, த. மான்ராசன், எம். மனோகரன் மற்றும் பலர். (அன்று காலையில் மன்றத்தில் இனிப்பு வழங்கப்படும்; நகரில் முக்கிய இடங்களில் ஏ. எஸ். கனி கொடியேற்றி வைப்பார்).

வடசேரி

பேரறிஞர் அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு மரதர் தெருவில்; தலைவர்: ப. பிச்சநாதன் எம்.சி.; பேசுவோர்: க. அன்பரசன், ஏ. திரவியம், எம். சி. மாலன் எம்.பி., அ. குணசீலன். (காலை 9-மணிக்கு ஜி. குமரேசன் கொடியேற்றுவார்; 9 30 மணி: இனிப்பு வழங்குதல்; 10-மணி: ஒலி நாடகம்; மதியம்—12-மணி: சர்க்கரைப் பொங்கல் வழங்குதல்; இரவு 10-மணி; மதுரை தங்கராசு -- கண்ணம்மா குழுவினரின் 'அண்ணா இருக்கின்றார்' எனும் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

கா. கணபதிபாளையம்

தி. மு. கழக சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., வ. க. இராமராசன் எம்.எல்.ஏ., கே. கே. செல்வக்குமார், எஸ். ஜி. கண்ணப்பா, கே. எஸ். ஆனந்தன், ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி கே. உழனியப்பன் மற்றும் பலர்.

அரியலூர்

நகர தி.மு.க. சார்பில் இரவு 8 மணிக்கு ஒற்றுமைத் திடலில்; தலைவர்: கோ. சிவப்பெருமாள் எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் ப. உ. சண்முகம், எம். எஸ். வெங்கடாசலம், து. எத்துராசன், இரா. சின்னையன், வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ., செ. சதாசிவம் எம்.எல்.ஏ., அ. சின்னசாமி எம்.எல்.ஏ., அன்பில் கோபால், அருணாசலம், சா. இராமசாமி, த. ஆறுமுகம், பி. பழனிசாமி.

24--9--72

சென்னை 5 வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 5 மணிக்கு சோலையப்பன் தெரு மண்டபம் அருகில்; தலைவர்: க. ஆறுமுகம்; பேசுவோர்: இளம்பரிதி, எம். குமார், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், கே. எம். கண்ணபிரான் எம்.சி., மு. நடராசன், கி. இராமலிங்கம், மு. சண்முகம், கு. கடம்பநாதன், ம. சண்முகம், வ. வாசுதேவன் மற்றும் பலர். (காலை 9 மணிக்கு மு. நடராசன் தலைமையில் -- க. ஆறுமுகம் முன்னிலையில் பி. ஏ. என். இராசரத்தினம் கொடியேற்றுவார்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ. அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்; கோ. முத்தையா ஏழைகட்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்குவார்.)

செங்கற்பட்டு

வட்ட -- நகர தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா -- 'பாரத்' விருது பெற்ற புரட்சி நடிகருக்கும் பாராட்டு விழா; மாலை 6 மணிக்கு பிள்ளையார் குளம் திடலில்; வரவேற்புரை: செ. நா. லோகநாதன்; தலைவர்: செ. எ. பலராமன்; பாராட்டும் பெறுபவர்: கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். எம்.எல்.ஏ.; பாராட்டுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி, சி. சிட்டிபாபு எம்.பி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., வி. பி. அகிலன், இராம. வீரப்பன், திரைப்பட நடிகர் திருச்சி சௌந்தரராசன், வ. பசுபதி, ஏ. ஆர். அன்சர், செ. மு. தட்சிணாமூர்த்தி, கோ. செகதீசன், ம. வெ. விட்டல், கவிஞர் ந தென்கோவன், ஆ. விநாயகம், செ. கி. வேணு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் -- வட்டச் செயலாளர்கள் -- நகரமன்ற உறுப்பினர்கள்; நன்றி தெரிவித்து எம்.ஜி.ஆர். உரையாற்றுவார்; அன்று மாலை 5 மணிக்கு புரட்சி நடிகருக்கு நகராட்சி சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

திண்டுக்கல்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு நாயக்கர் புதுத் தெருவில்; தலைவர்: க. வே. விக்கிரமாதித்தராசன்; பேசுவோர்: பொன் சீனுவாசன், கே. நாகராசன் எம்.எல்.ஏ., ஓ. என். சிவஞானம், மு. காதர்சா, து. இராமலிங்கம், சு. வரதராசன் எம்.சி., இரா. முனியம்மன், என். கோவிந்தராசு எம்.சி., கே. பி. குட்புசாமி, க. மைக்கேல் மற்றும் பலர். (முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி உண்டு)

திருவானைக்காவல்

திருச்சி வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6.30 மணிக்கு சன்னதித் தெருவில்; தலைவர்: எம். எஸ் வெங்கடாசலம்; பேசுவோர்: அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், எஸ் ஏ. ஜி ராபி, ஜே. எஸ். இராசு எம்.எல் ஏ., கோ. இளங்கோவன் எம்.எல்.ஏ., பேராசிரியர் கலியபெருமாள், செல்வேந்திரன், க. இராசவேலு எம்.சி., புலவர் அருணா, தாமரைச் செல்வன், டி. என். வையாபுரி மற்றும் பலர்.

மதுரை

29-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு தேங்காய்டு பொட்டலில்; தலைவர்: எல். எஸ். சுந்தரம்; பேசுவோர்: சி. பி கனகசபை எம்.சி., கு. திருப்பதி எம்.எல்.ஏ., சொ. காவேரி மணியம் எம்.எல்.ஏ., எம். ஆர். சங்கரன் (துணை மேயர்), கே. எஸ். சந்தானம் எம்.சி., எஸ் நாச்சியப்பன்.

விருத்தாசலம்

வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு வானொலித் திடலில்; தலைவர்: சி. முனுசாமி; பேசுவோர்: கே. விநாயகம், எம். செல்வராசு, பொ. சொக்கலிங்கம் எம்.எல்.ஏ., வி. மாயவன் எம்.பி., என். இராசாங்கம் எம்.எல்.ஏ., கே. ஜெயமாலை எம்.எல்.ஏ., முத்து. தமிழரசன், தரு. இராசவேலு, புரு. ஐத்மனாபன், வி. இராமநாதன், அ. இலக்குமணன் மற்றும் பலர்.

திருக்கோகர்ணம்

27, 28-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு சத்தியமூர்த்தி திடலில்; தலைவர்: கோ. சீனிவாசன்; பேசுவோர்: பி. ஆர். இலட்சுமிகாந்தன், அ. தியாகராஜ காடுவெட்டியார் எம்.எல்.ஏ., க. வீரையா எம்.பி., அ. பெரியண்ணன், எம். எஸ். அப்துல் மஜீத் எம்.சி., பா. செழியன் எம்.சி., க. சிங்கமுத்து, அறந்தை சுப. வேலவன், மற்றும் பலர்.

அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்:

23--9-72

சேலம்—4

அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் 23—9—72 மாலை 6-30 மணிக்கு செவ்வாய்ப் பேட்டை லாரி நிலையத் திடலில்; இசை நிகழ்ச்சி; வரவேற்புரை: எம். சொக்கலிங்கம்; தலைவர்: கே. ஏ. ரகீம்; இசை முரசு நாகூர் அனிபா எம்.எல்.சி. குழுவினர் இன்னிசை நடைபெறும்.

(இரவு 10-மணிக்கு நாடகம்; தலைவர்: எஸ். நாகரத்தினம்; முரசொலி அடியார் குழுவினரின் 'தங்க வங்கம்' நாடகம் நடைபெறும்; நன்றியுரை: எஸ். வி. நாதன்.

தூக்கநாயக்கன்பாளையம்

தி. மு. க. சார்பில் 28—9—72 இரவு 7-மணிக்கு கமலா அரிசி ஆலை எதிரில் கவியரங்கம்; வரவேற்புரை: பி. ஏ. சாமிநாதன் எம்.பி.; தலைவர்: கவிஞர் சுரதா; பொருள்: 'அறிஞரெனும் தமிழ்ப் பிள்ளை' பல்வேறு தலைப்புக்களில் பங்கேற்போர்:—

புலவர்கள் ஞான. செந்தில்நாதன், கண. சுவாமிநாதன், இரா. வடிவேலன், பொதிகைச் செல்வன், ஆடலரசு, எழில்வேலன், மணிமுடிச்சோழன், குடியரசு, முருகு சுந்தரம், புலமைப்பித்தன்.

24--9-72

சென்னை 12-வது வட்டம்

தோழமைக் கழகச் சார்பில் காலை 9-மணிக்கு சண்முகராயன் சந்து 4-எண்ணுள்ள இல்லத்தில்; தலைவர்: ப. மு. ஏகாம்பரம்; கொடியேற்றுபவர்: வி. முனுசாமி (முன்னாள் மேயர்); அண்ணா படத் திறப்பாளர்: ஜி இலட்சுமிபதி எம்.சி.; இனிப்பு வழங்குபவர்: அந்தோணிமுத்து; பேசுவோர்: வலம்புரி ஜான், சா. கணேசன் (முன்னாள் மேயர்), மு. சா. இளங்கோவன், ரங்கபாஷ்யம், மாயூரம் எஸ். அய்யாறு மற்றும் பலர்.

வடகேசரி

வடசேரி அண்ணா மன்றத்தின் சார்பில் காலை 10 மணிக்கு ஒலி நாடகம்; மாலை 4-மணிக்கு சிலம்பாட்டம்; 6-30 மணிக்கு பொதுக் கூட்டம்; தலைவர்: பி. நடராசன்; பேசுவோர்: கா. வையைநம்பி, மைக்கேல் ராசு, சி. சுப்பிரமணியம், டி. ஏ. சேவியர்; இரவு 10-மணிக்கு 'இரத்த முத்திரை' என்னும் நாடகம்.

சேலம்

விழாக் குழுவினர் சார்பில் மாலை 7-மணிக்கு செவ்வாய்ப்பேட்டை லாரி நிலையத் திடலில்; அமைச்சர் க. இராசாராம் தலைமையிலும்—ஆர். சண்முகம் முன்னிலையிலும் சென்னை கலைஞர் நாடக மன்றத்தின் முரசொலி அடியார் குழுவினர் நடிக்கும் 'தென் திசைத் தீபம்' என்னும் நாடகம் நடைபெறும்; பகல் 12-மணிக்கு 5,000 ஏழைகட்கு உணவு அளிக்கப்படும்.

சிட்லபாக்கம்

தி. மு. க. சார்பில் காலை 8-மணிக்கு கழகப் பணிமனையில் கொடியேற்றிவைத்து இனிப்பு வழங்குதல்; பகல் 12 மணிக்கு உணவு வழங்குதல்; பிற்பகல் 2 மணிக்கு மாணவ -- மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்; மாலை 5 மணிக்கு பரிசு வழங்குதல்.

கோபி

நகர தி.மு.க. சார்பில் காலை 9 மணிக்கு பெரியார் திடலில்; கவிஞர் சுரதா தலைமையில் பட்டிமன்றம்; மாலை 6 மணிக்கு கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கம்; 'இராவண காவியம்' ஆசிரியர் புலவர் குழந்தைக்கு ஜி. என். இராசு எம்.எல்.சி. பட்டாடை அணிவிப்பார்; பி. ஒ. சாமிநாதன், டாக்டர் பழனியப்பன் எம்.எல்.ஏ., கே. எஸ். ஆனந்தன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்; மாலை இன்னிசை -- குழலிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தஞ்சை சம்பாப் பயிரைக் காக்க நடவடிக்கை

★

மைசூர் அணையிலிருந்து தண்ணீர் பெற முயற்சி

சென்னை, செப். 21—

தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிரைக் காப்பாற்றுவதற்காகத் தண்ணீர் கொடுத்து உதவும்படி மைசூர் மாநில அரசைக் கேட்டுக் கொள்வதற்காகத் தமிழ்ப் பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா தலைமையில் ஒரு குழு பெங்களூர் சென்றது.

இந்தக் குழுவை மைசூர் மாநிலத்திற்கு அனுப்பிவைக்க முடிவு செய்த விவரத்தை ஐதராபாத்திலிருந்து சென்னை திரும்பிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்து -- இதன் தொடர்பாகக் கூறியதாவது:—

"தமிழக நீர்த் தேக்கங்களில் நீர் மட்ட அளவு மிகக் குறைவாக உள்ள காரணத்தால், தஞ்சை மாவட்ட சம்பாப் பயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது; இதைக் காப்பாற்ற மைசூர் மாநிலத்திலிருந்து தண்ணீர் பெற வேண்டும் என்ற கோரிக்கையை அந்த மாவட்ட விவசாயிகள் தெரிவித்து வந்தனர்; மைசூர் மாநில அரசிடம் தண்ணீர் கோரிப் பெறுவதற்காக மாநிலப் பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா -- பொதுப் பணித் துறை செயலாளர் ஏ. பதமநாபன் -- நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளர் நமச்சிவாயம் ஆகிய மூவரையும் பெங்களூருக்கு அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது; அவர்கள் மைசூர் மாநில அரசுடன் விவாதிப்பார்கள்."

பொதுப் பணித் துறை செயலாளர் விளக்கம்

"தஞ்சை மாவட்டத்தில் ஏழு இலட்சம் ஏக்கர் நிலத்தில் சம்பா சாகுபடி ஆகவேண்டும்; இதில் சுமார் இரண்டரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் நடவு ஆகிவிட்டது; மீதமுள்ள நாலரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் நடவு நடுவதற்குத் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது; இந்தப் பயிரை பாதுகாப்பதற்காகவே மைசூர் அரசிடம் தற்காலிகமாக 'கடன் அடிப்படையில் தண்ணீர் கேட்கிறோம்"

என்று தமிழ்நாடு பொதுப் பணித் துறை செயலாளர் ஏ. பதமநாபன், நிருபர்களிடம் விளக்கிக் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நமது மாநில நீர்த்தேக்கங்களில் நீர்மட்ட அளவு மிகக் குறைவாக உள்ளது; எனவே, மைசூர் அரசிடம் தற்காலிக அடிப்படையில் கடனாகத் தண்ணீர் கேட்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கச் செய்ய ஏற்கனவே பல சிக்கன சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சம்பாப் பயிருக்கு இதுவரையில் இத்தகைய நீர்ப் பற்றாக்குறை நெருக்கடி ஏற்பட்டது இல்லை -- இதுவே முதல் தடவையாகும்.

1966-ம் ஆண்டில் குறுவை சாகுபடியின்போது தண்ணீர் பற்றாக் குறையும் -- தட்டுப்பாடும் ஏற்பட்டபோது மைசூர் மாநில அரசின் உதவி கோரிப் பெறப்பட்டது.

அதேபோன்று, முன்பு ஒரு தடவை மைசூர் அரசுக்குத் தேவைப்பட்டபோது தண்ணீர் கொடுத்து உதவப்பட்டது."

எண்ணத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுதான் வேறு பல திட்டங்கள் தீட்டியிருப்பார்கள் என்பதையும் பக்தவத்சலம் உணராமல் இருப்பதற்கு நியாயமில்லை.

இருந்தாலும், கழக அரசை ஏசவேண்டும் -- பேசவேண்டும் என்பதற்காக எழுதியிருப்பார் என்று கருதுகிறேன்."

அரியலூர் வட்டத்தில

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

செ. 23 காலை 9 மணி: அரியலூர் அரசினர் மருத்துவமனை புதிய வார்டு அடிக்கல் நாட்டுதல்;

காலை 11 மணி: திருமானூர் ஊராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்கு திறப்புவிழாவும் -- ஊராட்சி ஒன்றிய வரவேற்பும்;

மாலை 4 மணி ரெட்டிப்பாளையம் ஊராட்சி மன்ற வரவேற்பும் -- மின் விளக்கு ஏற்று விழாவும் -- பொது மக்கள் வரவேற்பும்;

மாலை 5 மணி: அரியலூர் ஊராட்சி ஒன்றியம் -- பேரூராட்சி மன்றம் ஆண்டிமடம்(?) ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வரவேற்பு;

இரவு 8 மணி: அரியலூர் நகர தி. மு. க. பொதுக்கூட்டம்.

சிம்சன் பிரச்சினையில் சுமுகமான முடிவு

முதல்வர் யோசனையை தொழிலாளர் ஏற்றனர்

தொழிலாளர் அமைச்சர் என்.வி.நடராசன் மகிழ்ச்சி

சென்னை, செப். 22—

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொண்டு வேலைக்குத் திரும்புவதென்று இதுவரையில் வேலைக்குத் திரும்பாமலிருந்த சிம்சன் தொழிலாளர்கள் நேற்றிரவு தீர்மானித்தனர்.

தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், இந்த முடிவினை வரவேற்றார்; 'சுமுகமான தொழில் உறவு நிலவ இந்த முடிவு துணை செய்யும்' என்று அவர் குறிப்பிட்டார்.

தவறான நடத்தைக்காக 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள 184 தொழிலாளரைப் பற்றிய நிர்வாகத்தினர் விசாரணை 45 நாட்களில் முடிக்கப்பட வேண்டும்.

15 நாட்களுக்கு ஒருமுறை தொழிலாளர் நலத்துறை ஆணையர் இந்த விசாரணை எந்த அளவு நடந்தேறியுள்ளது என்பதை ஆராய்வார்; விசாரணையின் முடிவை முதல்வர் இறுதியாக ஆராய்ந்து எவரும் பழி வாங்கப்படாதவாறு பார்த்துக்கொள்வார்.

இவையே முதலமைச்சர் கலைஞர் கடந்த செவ்வாயன்று தெரிவித்த சமரச யோசனையில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்களாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் ([illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.